தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 18-9-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**காய்கறிகளை பதப்படுத்துதல் பயிற்சி**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் **காய்கறிகளை பதப்படுத்துதல் பற்றிய பயிற்சி** 25-9-2013 மற்றும் 26-9-2013 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெறும். கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சி வழங்கப்படும்.

- ✓ உலர வைக்கப்பட்ட காய்கறிகள் (Dehydrated vegetables)
- ✓ ஊறுகாய் தயாரித்தல் (Pickles)
- ✓ உப்பில் ஊறவைத்தல் (Steeping preservation of vegetables)
- ✓ மிட்டாய் தயாரித்தல் (Candy)
- ✓ கெட்சப் தயாரித்தல் (Ketchup)
- ✓ சட்னி தயாரித்தல் (Chutneys)
- ✓ தயார்நிலை உணவுகள் (Instant mixes) - கீர் மிக்ஸ், சூப் மிக்ஸ் மற்றும் தயார்நிலை பேஸ்ட் (Kheer mix, soup mix and pastes)

ஆர்வமுள்ளவர்கள் ரூ. 1,000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) செலுத்தி தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ளலாம். நேரில் வந்து பெயரைப் பதிவு செய்து கொள்ள இயலாதவர்கள் பயிற்சி கட்டணத் தொகையை வரைவோலை மூலம் பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்ற பெயரில் கோவையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கியில் (State Bank of India) பெறத்தக்க வகையில் (Payable at Coimbatore) எடுத்து பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 003 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும். பதிவு செய்து கொள்ள இறுதி நாள் செப்டம்பர் 24, 2013.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள: 0422-6611268

மக்கள் தொடர்பு அலுவலர்